# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/3 - 2016 මාර්තු මස 28 වැනි සඳුදා - 2016.03.28

*1960/3 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**

(அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 01/2016)

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் 2016,மாச்சு மாதம் 10 ஆந் திகதியன்று இடம்பெற்ற பகிரங்க அமர்வின் போது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர். எச். எஸ். சமரதுங்க,<br>
செயலாளர்,<br>
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,<br>
கொழும்பு 1,<br>
2016, மாச்சு 21.

**தீர்மானம்**

இத்தீர்மானமானது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழ், இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அவ் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதங்களின்படி அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை ‘அ’ இன் ஏற்பாடுகளின் கீழ் முன்னுரிமை வீதங்கள் விதிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டியவிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதங்களின்படி இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்படவும் செலுத்தப்படவும் வேண்டுமென, இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| எச். எஸ். தலைப்பு (1) | எச். எஸ். குறியீடு (2) | | விவரணம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | தீர்வை வீதம் பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 10.06 | | | அரிசி | | | |
| | | | | | | |
| | 1006.10 | - | உமியுடன் கூடிய அரிசி (நெல் அல்லது குற்றப் பெறாத) | | கி. கி. ஒன்றுக்கு ரூபா 50 | கி. கிராம் |
| | 1006.20 | - | அகற்றிய அரிசி தவிடு நீங்காத அரிசி | | கி. கி. ஒன்றுக்கு ரூபா 50 | கி. கிராம் |
| | 1006.30 | - | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப் பட்ட அரிசி, மெருகூட்டப்பப்பட்டவை பளபளப்பாக்கப்பட்டவை அல்லது பளபளப்பாக்கப்படாதவை | | கி. கி. ஒன்றுக்கு ரூபா 50 | கி. கிராம் |
| | 1006.40 | - | உடைத்த அரிசி | | கி. கி. ஒன்றுக்கு ரூபா 50 | கி. கிராம் |

4- 639

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.